அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

மன்மத ஆண்டு வைகாசி-ஆனி மே 2015 முரசு 8 ஒலி 96



"ஜீவகாருண்ய ஒழுக்கம்
உடையவர்களாகி ஜீவர்களுக்கு
பசியென்கின்ற அபாயத்தினின்றும்
நீங்கச் செய்கின்ற உத்தமர்கள்
எந்த ஜாதியாராயினும், எந்த
சமயத்தாராயினும், எந்த
செய்கையை உடையவராயினும்
தேவர், முனிவர், சித்தர்,
யோகர் முதலிய யாவராலும்
வணங்கத்தக்க சிறப்புடையர்
ஆவார்களென்று சர்வ
சக்தியையுடைய
கடவுள் சாட்சியாக சத்தியம்
செய்யப்படுமென்று
அறியவேண்டும்." - வள்ளலார்

தியான யாத்திரை மற்றும்
ஆண்களுக்கான
இயற்கை நல வாழ்வியல் பயிற்சி முகாம்
அழைப்பிதழ் உள்ளே...

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# ஆன்மீக
# தியான யாத்திரை

## சென்னை - டெல்லி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - மதுரா - பிருந்தாவன் - டெல்லி - சென்னை

- புனித ஸ்தலங்களில் சாதுக்களின் தரிசனம் & சத்சங்கம்
- புனித கங்கையில் நீராடல்
- இமயமலையில் உள்ள குகைகளில் தியானம்
- தினசரி யோகா, பிராணாயாமம்
- திருஅருட்பா பாராயணம்

போன்ற ஆன்மீக நிகழ்வுகளில் கலந்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பு

**நாள்: ஜூலை 21 முதல் 26 வரை (6 நாட்கள்)**

**புறப்படும் இடம் சென்னை விமான நிலையம்**

6 நாட்கள் தங்குமிடம், உணவு, பேருந்து, AC இரயில், விமானத்தில் சென்றுவர (சென்னை-டெல்லி-சென்னை) இவை அனைத்திற்கும் சேர்த்து ரூ. 20,000 மட்டுமே!!

இந்தப் பயணம் ஒரு பொழுதுபோக்கு பயணம் அல்ல. இதுவொரு ஆன்மீக புனிதப் பயணம்! குறைந்த இடங்களே உள்ளது.

தொடர்புக்கு: 99427 76351 Email: vallalartrust@gmail.com

முன்பணம் ரூ.13,000 செலுத்தி முன்பதிவு செய்து தங்கள் வருகையை உறுதி செய்துகொள்ளவும்.



# திருச்செவிக்கு விண்ணப்பம்

எல்லாமாகிய இயற்கையின்பக் கடவுளே! தந்தையென்பவனது சுக்கிலப்பையின்கண் யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி தாயென்பவளது சோணித பையின்கண் சென்றடைந்த கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக என்னாலொருவாறு அளவிடப்பட்ட ஒரு கோடி ஒன்பது லக்ஷத்து அறுபதினாயிரங் கணப்போது பரியந்தம் எவ்வகைத் தடைகளும் வாராதபடி பகுதிப்பேரணுவுருவிற்கிடந்த எனது அகத்தினும் புறத்தினும் அருவாகியும் உருவாகியும் சலித்தல் முதலியவின்றி அன்பொடும் அருளொடும் பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட்பெருங்கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலில் சலிப்படைந்து தளர்ச்சியடைந்து அருவருப்புற்றும் சுதந்திரமற்றும் பராக்கிலிருந்துந் தடைபடுகின்ற தந்தைமுதலிய ஜீவர்கள் கருணைத்தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்விதத்தினுஞ் சிறிதாயினும் மனந் துணியாமையால் அங்ஙனம் உபசரியாதவனாகி இருக்கின்றேன் ஆகலில் தேவரீரது திருவருட் பெருங்கருணையை என்னென்று கருதுவேன் என்னென்று துதிப்பேன்.

அருட்பெருஞ்ஜோதித் தனித்தலைமைக்கடவுளே தாயென்பவளது சோணிதப் பையின்கண் யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி இவ்வுலகில் தோன்றிய கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக என்னால் ஒருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷம் கணப்போது பரியந்தம் எவ்வகைத் தடைகளும் எவ்வகை ஆபத்துகளும் வாராதபடி பூதப் பேரணு உருவிலும் பிண்டப் பெருவடிவிலும் கிடந்த எனதகத்தினும் புறத்தினும் அருவாகியும் உருவாகியும் சலித்தல் முதலியவின்றிப் பெருந்தயவினோடு பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலிற் சலித்தும் தளர்ந்தும் அருவருத்தும் பரதந்திரித்தும் பராக்கடைந்தும் தடைபடுகின்ற தாய் முதலிய ஜீவர் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்வகையினும் எத்துணையும் மனந் துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனாகி இருக்கின்றேன். ஆகலில் தேவரீரது திருவருட் பெருங்கருணையை என்னென்று கருதுவேன்! எங்ஙனந் துதிப்பேன்!

திருச்சிற்றம்பலம்

## சிந்தை மகிழ...

# அவனருளாலே அவன் தாள் வணங்கு

அநுபூதி என்றால் ஒன்றை அனுபவித்து அதன் மூலம் பெறப்படும் அனுபவம் என்று அர்த்தம். அநுபூதி நாம் பெறும் அனுபவத்தைச் சார்ந்துள்ளது. அதாவது, நாம் பெற்ற அனுபவம் சுகமாக இருந்தால் சுகாநுபூதி என்றும், துன்பமாக இருந்தால் துக்காநுபூதி என்றும் கூறலாம். இதுபோன்ற சுகதுக்கங்களுக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை நாம் பெறும்பொழுது அதனையே ஆனந்த அநுபூதி என்கிறோம். இந்த ஆனந்த அநுபூதியில் மூழ்கி அதனை அனுபவிக்கும்பொழுது "இது இப்படி இருக்கும்" என்று விவரிக்க இயலாது. மேலும் அந்த அனுபவம் பெற்றவரையும் அங்கு காண இயலாது. ஏனெனில் 'நான்' என்ற அகங்காரம் ஒழிந்த பின்புதான் இது சாத்தியப்படும். இதுவே அவரை சொல்லொணா பரவசநிலையை அடையவைக்கும்!

இந்த அநுபூதியை 3 விதமாக கூறலாம். **1.ஸ்வாநுபூதி 2.ஸாநுபூதி 3.ஸஹ அநுபூதி**

தனியொருவன், புலன்கள் மூலமாக வெளியே இருப்பவற்றை கண்டு, கேட்டு, பார்த்து, ருசித்து, உணரும் நிலை **ஸ்வாநுபூதி** (ஜட இயற்கையை அனுபவித்தல்). தன்னிலையை புரிந்து கொண்ட பின்பு மற்றவர்களின் நிலையை புரிந்து கொள்ளும் நிலை **ஸாநுபூதி** (மற்ற உயிர்நிலைகளை புரிந்து கொள்ளுதல்). மற்றவர்களின் சுகதுக்கங்களை புரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் பகிர்ந்து கொள்வதால் **ஸஹ அநுபூதி** அடையலாம். இஃது பிறருக்காக வாழும் நிலை,(அன்பாக இருத்தல்).

முதல் அநுபூதியை விட இரண்டாவது சிறந்தது. இரண்டாவதைவிட மூன்றாவது சிறந்தது. இவையனைத்தும் மனித தத்வத்துக்கு உதாரணம். இன்னும் இதை விரிவாகக் காணலாம்.

முதலாவது ஸ்வாநுபூதி. இது தனி நபர் சம்பந்தப்பட்டது. எனவே தனி ஒருவனுக்கு மட்டுமே பொருந்தும். தன்னுடைய புலன்கள் மூலமாக இயற்கையில் இருக்கின்றவற்றை கண்டு, கேட்டு, ரசித்து அனுபவிக்க ஆரம்பிக்கும் நிலை!

புதிதாக பிறக்கும் குழந்தைக்கு எந்த ஒரு அனுபவமும் கிடையாது. அதற்கு எதை பற்றிய விழிப்புணர்வும் இல்லை. சில தினங்களுக்கு பிறகே தன்னைச் சுற்றி நடப்பவற்றை கவனிக்கும். தன்னுடைய தாய் தன்னை தொடுவதை உணர்ந்து கொள்ளும். தாய் சிரிப்பதை பார்த்து தானும் சிரிக்க முயலும். இது இயற்கையின் தன்மை. பிறப்பின் அர்த்தமும்கூட. எனவே, ஒருவன் தன்னை சுற்றி நடப்பவற்றை கண்டு, கேட்டு, மகிழ்ந்து தன்னை கணிக்க ஆரம்பிக்கின்றான்.

இந்த இடத்தில்தான் விலங்கிலிருந்து மனிதன் வேறுபடுகிறான். விலங்கு ஐம்புலன்களை வைத்து இயற்கையை உணரும் ஆனால் அதற்கு ரசிக்கவோ, அனுபவிக்கவோ தெரியாது! ஆனால் மனிதனுக்கு ஆறாவது புலன் பரந்தநிலையில் வெளிப்புறத்தை நோக்கி விரிந்திருப்பதால் அவன் பலவற்றை பார்த்து, அனுபவித்து தன்னிலையைப் பெறுகிறான். இதுவே ஸ்வாநுபூதி.

இதுவும் நபருக்கு நபர் மாறுபடும். ஏனெனில் ஒவ்வொருவரும், ஒரே விஷயத்தை வேறு வேறாக பார்க்கலாம். ஆகையினால் அனுபவத்திலும் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

உ.தா: ஆசிரியர் அனைத்து மாணாக்கர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் பாடங்களை கற்றுக்கொடுக்கிறார். ஆனாலும் ஒரு சிலருக்கு முழுவதும் புரிந்திருக்கும். ஒரு சிலருக்கு ஓரளவு புரிந்திருக்கும். மேலும் சிலர் வகுப்பில் கவனம் செலுத்தாததால் புரியாமலேயேகூட போயிருக்கும். இப்படித்தான் அனுபவக் கூறுகள் மாறுபடுகின்றன.

மனிதர்களாக பிறந்திடினும், அறிவு வளராத குழந்தைகளாகவே பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மனித உருவத்தில் இருக்கின்ற விலங்காவும், இயற்கையை அனுபவிக்காமலும், அனுபவிக்கத் தெரியாமலும் வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்ததாக ஸாநுபூதி, தன்னிலையை புரிந்து கொண்டபின் மற்றவர்களின் நிலையை புரிந்து கொள்ளும் நிலை. அதாவது ஸ்வாநுபூதியின் துணை கொண்டு ஸாநுபூதியை அடைதல்!

உ.தா: நேர்முகத் தேர்விற்காக ஒரு அலுவலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார் இளைஞர் ஒருவர். நேர்முகத் தேர்வு என்பதால் தூய வெண்ணிற ஆடை அணிந்திருந்தார். மழை பெய்திருந்த காரணத்தால் சாலையில் சேறும் சகதியும் ஆங்காங்கே தேங்கிக்கிடந்தது. எனவே அவர் மிகவும் கவனமாக நடந்துகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு கார் அவரருகே வேகமாக சென்றதில் அவருடைய உடை முழுவதிலும் சேற்றுத் தண்ணீர் வாரியடிக்கப்பட்டது. அந்த நிலையில் நேர்முகத்தேர்விற்கு செல்ல இயலாததால் வேலை வாய்ப்பை இழந்தார். காலங்கள் கடந்தன. அவருடைய சொந்த முயற்சியால் நன்கு உயர்ந்த நிலையில் இருந்தார். சொந்தமாக கார் வாங்கி அதில் பயணம் செய்யலானார். மழை பொழியும் போதெல்லாம் தன்னுடைய ஓட்டுனரிடம் மெதுவாக செல்லும்படி எச்சரித்துக் கொண்டே இருப்பார். தனக்கு அன்று நேர்ந்த நிலை எவருக்கும் வரவேண்டாம் என்று மற்றவர்கள் மீது கொண்டுள்ள அக்கறை அவருக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. இது தன்னிலையிலிருந்து மற்றவர்களை பார்த்தல். ஆனால், இது அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொருந்துமா என்று பார்த்தால் அது சற்று சந்தேகம்தான்.

தன்னிலையிலிருந்து மற்றவர்களை பார்க்கும்பொழுது அவர்களின் நிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் நிலையிலிருந்து பார்த்தால் மட்டும்தான் அவர்களை முழுவதும் புரிந்து கொள்ள முடியும்.

உ.தா: இரயில் வண்டியில் ஒரு இளைஞனும், பாட்டியும் பயணித்துக் கொண்டிருந்தனர். அந்த இளைஞர் தான் காணும் அனைத்தையும் மிகவும் வியப்புடன் பார்த்துக் கொண்டே இருந்தார். பயணிகளைக் கூட.

5 வயது சிறுவனைப் போல நிறைய கேள்விகளை பாட்டியிடம் கேட்டுக் கொண்டேயிருந்தார். அந்த பாட்டியும் சற்றும் சலிக்காமல் அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாக பதிலளித்துக் கொண்டே இருந்தார். இதைக் கண்ட மற்ற பயணிகளுக்கு வேடிக்கையாக இருந்தது. சிலருக்கு வெறுப்பாகக்கூட இருந்தது. பாட்டி கொடுக்கும் செல்லம்தான் அவனை இப்படி புத்திசுவாதீனம் இல்லாதவனைப்போல் ஆக்கிவிட்டது என்று அவருக்கு எதிரே அமர்ந்திருந்த பெண்மணி நினைத்துக் கொண்டார். சிறிது நேரம் கழித்து அவர் அந்த பெண்மணியை கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தார். பெண்களையே காணாத ஒருவன் காண்பதுபோல இருந்தது அது! இதை பொறுத்துக் கொள்ள முடியாமல் அந்த பெண்மணி பாட்டியுடன் கோபம் கொண்டு சண்டையிட ஆரம்பித்தார். "அந்த பையனுக்கு என்ன பைத்தியமா" என்று கேட்டாள். அதை கேட்ட பாட்டி சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு பின்னர் பேச ஆரம்பித்தார்.

"பிறவியிலேயே இந்த பையன் பார்வையற்றவன். அவன் பிறந்த சில தினங்களிலேயே அவனுடைய தந்தை இறந்துவிட்டார். அவனுடைய தாயும் சில தினங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். அந்த தாயின் கண்களைத்தான் மருத்துவர்கள் இவனுக்கு வைத்திருக்கிறார்கள். இப்பொழுதுதான் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு சென்று கொண்டிருக்கிறோம். இந்த உலகத்தின் பிரம்ம ஸ்வரூபத்தை இப்பொழுதுதான் பார்க்கிறான்" என்று கூறி முடித்தாள் பாட்டி. இதைக் கேட்ட அந்த பெண்ணிற்கு இருதயமே உடைந்ததுபோல ஆனது. கண்களில் நீர் பெருகியது.

எனவே நாம் காணும் அனைத்து விஷயங்களும் உண்மை கிடையாது. அதில் நமக்கு தெரியாத பல விஷயங்கள் இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே தன்னிலையிலிருந்து மற்றவர்களை காணும் பொழுது தன்னுடைய அனுபவத்தை மட்டும் வைத்து கணிக்காமல் அவர்களின் நிலையையும் உணர்ந்து செயல்படுதல் ஸாநுபூதி.

மூன்றாவது ஸஹ அநுபூதி. எல்லாவற்றிலும் இருக்கின்ற உண்மையை உணர்ந்து, அனுபவித்து, ஜடத்தை விலக்கி மூலத்தை பார்க்கும் நிலை.

அதாவது இறைவன், உயிர், இயற்கை என்ற மூன்று மட்டும்தான் உள்ளது. இதைத்தான் பதி, பசு, பாசம் என்கிறது சைவ சித்தாந்தம். இம்மூன்றும் அநாதி. உயிருக்கும் இறைவனுக்கும் இடையில் பாசம் எனப்படும் அறியாமை மறைத்துக்கொண்டு ஜீவன் தன் உண்மையையும், இறையுண்மையையும் உணர முடியாமல் தடுக்கின்றது.

இந்த சிறைக்கூட்டிலிருந்து வெளிவருவதற்கு பரமாத்மாவின் அனுக்கிரகம் அனைவருக்கும் வேண்டும். ஆனால் அதனை அடைவதற்கு தனித்தனியாக ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். தனக்காக என்று வாழ்வதில் .

தவறேதுமில்லை. ஆனால் நாம் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களை பற்றி சிந்திப்பதால் மட்டுமே ஆத்மாவின் இயல்பு நிலையாகிய தயவு வெளிப்படும். அப்போதுதான் நாம் நம்முடைய செயற்கை குணங்களையெல்லாம் மறந்து செயல்படுவோம். ஆத்மாவாகிய நாம் தன் இயல்பு நிலையாகிய தயவோடு இருக்கும்போது மட்டுமே ஆனந்த அனுபவத்தின் பக்கம் செல்ல முடியும். பின் ஒவ்வொரு படியாய் அடியெடுத்து வைத்து தெய்வத் தன்மையை அடைய முடியும்.

இத்தகைய அறிவும் சுதந்தரமும் இருந்தும் இதை பயன்படுத்தாமல் இருப்பவன் விலங்குபோல் அநுபூதி இல்லாமல் இருப்பான். திருவருளால் தனக்கக் கிடைத்த இந்த அறிவையும் சுதந்திரத்தையும் பயன்படுத்தி தானும் வாழ்ந்து மற்ற உயிர்களையும் வாழ வைப்பவன் 'மனிதன்' என்ற நிலையை அநுபூதியுடன் எட்டுகிறான். தான் உயர்ந்ததோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்ல முற்படுபவன் ஆனந்த அனுபூதியுடன் 'முழுமனிதன்' என்ற நிலையை அடைகிறான்.

**ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல்**

உள்ளபடி பசியால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு **ஆகாரம் கொடுக்க நினைத்தபோது** நினைத்த புண்ணியரது மனம் வேறு பற்றுக்களை விட்டுச் சுத்த கரணமாகி நினைத்தபடியால் அந்தப் புண்ணியர்களை **யோகிகளென்றே** உண்மையாக அறிய வேண்டும்.

ஆகாரம் கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது **அவர் உண்ணுவது தாம் உண்ணுவதாக** அறிந்து களிக்கின்றபடியால் **ஞானிகளென்றே** உண்மையாக அறிய வேண்டும்.

ஆகாரம் கொடுக்க உண்டு பசி தீர்ந்தவர்களுக்கு அத்தருணத்தில் **ஆன்மாவின் உள்ளும் புறத்தும், கீழும் மேலும், நடுவும் பக்கமும் நிறைந்து கரண முதலிய தத்துவங்களெல்லாம் குளிர்வித்துத் தேகமுழுவதும் சில்லென்று தழைய முகத்தினிடமாகப் பூரித்து விளங்குகின்ற கடவுள் விளக்கத்தையும், திருப்தியின்மாகிய கடவுள் இன்பத்தையும் பிரத்யட்சத்தில் தரிசித்து அனுபவிக்கின்றார்கள்** ஆதலால் அந்த **புண்ணியர்கள் கடவுளைக் கண்டவர்கள்** என்றும் கடவுள் இன்பத்தை அனுபவிக்கின்ற முத்தரென்றும் அறிய வேண்டும்.

பசி நீங்க உண்டு சந்தோஷித்தவர்கள் **இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கின்றார்கள்** ஆதலால் **இவர்களே தெய்வமும்** என்று உண்மையாக அறிய வேண்டும்.

*திருச்சிற்றம்பலம்*

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# மூத்தோர் சொல் அமிர்தம்



முன்பு ஒரு காலத்தில், ஒரு மன்னனுக்கு மனித குலம் தோன்றிய காலம் முதல் இன்றுவரையுள்ள எல்லோரின் வரலாறு முழுவதையும் படிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. எனவே தன் நாட்டிலுள்ள அறிஞர்களை அழைத்து இதற்கான செலவு மற்றும் கால அளவு ஆகியவற்றைக் கணிக்குமாறு கூறினான். அந்தக் குழு அவர்களுக்குள் விவாதித்து, பின்னர் அவர்களில் மூத்தவர் வந்து மன்னனிடம், “அரசே, நீங்கள் விரும்பும் இந்தத் திட்டத்தில் ஏராளமான வேலை இருக்கிறது, நிறைய நேரமும் தேவை. ஆனாலும் இதை முடித்துவிடலாம். சுமார் இருபது வருடங்களும் இருபதாயிரம் பொற்காசுகளும் தேவைப்படும்” என்று கூறினார். செலவும் நேரமும் அதிகமாக இருந்தாலும், மன்னனின் ஆசை அதனினும் பெரிதாக இருந்ததால் இதை ஏற்றுக்கொண்டான். பணத்தை அளித்துவிட்டு காத்திருக்கத் தொடங்கினான். அப்போது அவனுக்கு ஐம்பது வயது.

பின்னர் பண்டிதர்கள் தாங்கள் ஒருங்கிணைத்த மனிதகுல வரலாற்றை 2000 நூல்களில் வடித்து 20 யானைகள் மீது ஏற்றி வந்தபோது மன்னன் தனது எழுபதாவது பிறந்த நாளை எதிர் நோக்கி இருந்தான். காலம் அவனது பார்வைத் திறனையும் கேட்கும் திறனையும் ஏன் ஆரோக்கியத்தையும் கூட வெகுவாகக் குறைத்திருந்தது. இதைப் படிக்க பத்தாண்டு காலம் பிடிக்கும் என அறிஞர்கள் தெரிவித்ததைக் கேட்ட மன்னன், “என்ன பத்து வருடங்களா? இதில் மூன்றில் இரண்டு பாகம் முடிப்பதற்குள் என் ஆயுளே முடிந்துவிடும். இதை பத்தில் ஒரு பங்காக சுருக்கித் தரமுடியமா?” என்றான். அதற்கு அறிஞர்கள் அனைவரும் கலந்து பேசி, சுமார் ஐந்து வருடங்களும் 5000 பொற்காசுகளும் ஆகும் என்றனர். அரசனும் வேறு வழி இல்லாமல் அதை ஏற்றுக்கெண்டான்.

ஐந்து வருடங்கள் கழித்து 200 நூல்களுடன் அறிஞர்கள் ஒரு மாட்டு வண்டியில் வந்தபோது அரசனின் ஆரோக்கியம் மேலும் குறைந்து, நகரமுடியாத நிலையில் இருந்தான். இந்த நூல்களை அவனால் பார்க்கக் கூட முடியவில்லை. புத்தகத்தோடு வண்டியில் வந்த பண்டிதர்களிடம் மன்னன், “மிக்க நன்றி. ஆனால் இத்தனை பெரிய நூல்களை என்னால் படிக்க இயலாது. நீங்கள் படித்துக்காட்டினாலும் அதற்கும் நீண்ட நேரம்

தேவைப்படும். அவ்வளவு பெரியதாய் இருக்கின்றன. இதை மேலும் சுருக்கி மூன்று நூல்களாகத் தர முடியும் என்றால் நலமாக இருக்கும்" என்று கூறினான். அதற்கு அறிஞர்கள் மன்னனிடம், ஒரு வருட காலத்தில் 1000 பொற்காசுகள் செலவில் அதை முடிக்க முடியும் என்று உறுதி அளித்து விட்டுச் சென்றனர்.

ஒரு வருடம் கழித்து மூன்று பெரும் நூல்களுடன் அறிஞர்கள் வந்தபோது அரசன் தனது இறுதித் தருவாயில் இருந்தான். வைத்தியர்கள் அவனைப் பிழைக்க வைக்க அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தனர். அந்த நூல்களைக் கண்ட அரசன், "இவ்வளவு பெரிய நூல்களா! இதை படிப்பதற்குள் என் மூச்சு நின்றுவிடுமே! இத்தனை நாள் நான் பட்ட கஷ்டமும் செய்த செலவும் வீண். என்னால் மனித குல வரலாற்றை அறிந்துகொள்ள முடியாதே" என்று முனகினான்.

இதைக் கேட்ட அந்த அறிஞர் கூட்டத்தில் இருந்த ஒரு அறிவாளி மன்னனின் மன வருத்தத்தைக் கண்டு, "அரசே! அப்படி அல்ல. மனித வரலாற்றை நான் சுருக்கமாக உங்கள் காதுகளில் கூறமுடியும்" என்றார். அதற்கு "உடனே கூறுங்கள்" என்று ஆணையிட்டான் மன்னன்.

உடனே அந்த அறிஞர் குனிந்து மன்னனது காதுகளில், **"மனிதன் பிறந்தான், உணவு உண்டான், பின்னர் இறந்தான். இதுதான் மனித குல வரலாறு"** என்று கூறினார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மன்னன், **"இவ்வளவுதானா வாழ்க்கை?"** என்றவாறு மீளாத் துயிலில் ஆழ்ந்தான்.

**சாகாத கல்வியே கல்வி ஒன்றே சிவம்**
**தான்என அறிந்த அறிவே தகும் அறிவு**
**மலம் ஐந்தும் வென்ற வல்லபமே**
**தனித்த பூரண வல்லபம்**
**வேகாத காலாதி கண்டு கொண்டு எப்பொருளும்**
**விளைய விளைவித்த தொழிலே**
**மெய்த்தொழிலதாகும் இந்நான்கையும் ஒருங்கே**
**வியந்தடைந்து உலகம் எல்லாம்**
**மாகாதலுற எலாம்வல்ல சித்தாகி நிறைவான**
**வரமே இன்பமாம் மன்னும்இது**
**நீபெற்ற சுத்த சன்மார்க்கத்தின்**
**மரபென்று உரைத்த குருவே**
**தேகாதி மூன்றும்நான் தருமுன் அருள் செய்து எனைத்**
**தேற்றி அருள்செய்த சிவமே**
**சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே**
**தெய்வநடராஜ பதியே.** **– திருஅருட்பா**

திருச்சிற்றம்பலம்

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு:
*1. ஏமசித்தி 2. சாகாக் கல்வி 3. தத்துவநிக்கிரகம் செய்தல்*
*4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்.*

# மூன்று நிபந்தனைகள்

சென்ற மாத தொடர்ச்சி...



சேலம் தயவுத்திரு. குப்புசாமி அய்யா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து...

ஆன்ம நேய அன்பர்களே! சென்ற மாத இதழில் ஆன்மா லயப்படும் இடம்தான் ஆலயம் என்பதையும் சமய நெறியில் இந்நிலையே இறுதி நிலையென்று சொல்லப்பட்டதையும் கண்டோம். ஆனால் இதற்குமேல் **பரமுத்தி, ஞான சித்தி** என்ற இரு நிலைகளைக் கடந்து **அருட்பெருஞ்ஜோதி நிலை** என்ற ஒன்று இருக்கிறதென நம் வள்ளல் பெருமானார் அருளியுள்ளதைக் கண்டோம்.

இதை தெளிவுபடுத்தவே வடலூர் பெருவெளியில் நம் பெருமானார் ஞானசபையை நிறுவினார்கள் என்பதையும் அறிந்தோம். அந்த ஞான சபையில் விளங்கும் கடவுளை வழிபட புலை கொலை தவிர்த்தல், ஒவ்வொருவரும் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசி ஆற்றுவித்தலாகிய ஜீவகாருண்ய பணியினை செய்தல், மாதந்தோறும் நடைபெறும் மாதப் பூச ஜோதி தரிசன பெருவிழாவிற்கு வந்து நம் வள்ளல் பெருமானார் உருவாக்கிய சத்திய தருமச் சாலையில் தொண்டு செய்தல், பின் சத்திய ஞான சபையில் ஜோதி தரிசனம் காணல் என்ற மூன்று நிபந்தனைகளையும் தெரிந்து கொண்டோம்.

மேலும் பூர்வஞான சிதம்பரமெனும் சிதம்பரம் திருத்தலத்தில் அமைந்துள்ள நடராஜர் கோயிலில் காலங்காலமாக மறைத்து வைக்கப்பட்ட சிதம்பர ரகசியத்திற்கு விடையாகத்தான் ஞான சபையில் ஜோதி தரிசனம் காண்பிக்கப்படுகிறது, ஆகாய வெளிக்குள் விளங்கும் ஜோதியே-அருட்பெருஞ்ஜோதியே சிதம்பர ரகசியத்திற்கு விடை என்பதையும் தெரிந்து கொண்டோம். இனி அதைப்பற்றி விரிவாகக் காண்போம்.

பதினைந்து தினங்களுக்கு ஒருமுறை சிவாலயங்களில் பிரதோஷ வழிபாடு நடைபெறும். அச்சமயம் அம்மையும் அப்பனும் நந்தி வாகனத்தின் மீதேறி உலா வருவார்கள். இங்கே நந்தி என்பது என்ன? நம் மறைஞான சம்பந்தர் ‘தோடுடைய செவியன் விடையேறியோர்’ எனப் பாடுகின்றார். இங்கு ‘விடை’ என்பது ‘நந்தி’ என்று பொருள்.

அவ்விதம் பார்த்தால் நம் ஆத்மாவாகிய நந்தியின் மேலேறியே அம்மையும் அப்பனும் உலா வருகின்றார்கள். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நாம் யார் என்பதை முதலில் அறியவேண்டும். நான் இந்த உடல் அல்ல, இந்த மனமும் அல்ல. நான் ஆன்மா என்பதை உணர்ந்துவிட்டால் நம்முடைய எல்லாத் துன்பங்களும் தீர்ந்துவிடும்.

அதாவது, மனிதனுடைய உடல், மனம் சம்பந்தமான எந்தத் துன்பமாக இருந்தாலும் இவை எல்லாவற்றிற்கும் ஒரே தீர்வு முதலில் நாம் நம்முடைய ஆத்மாவை அறிந்துகொள்ள வேண்டும். அதுதான் விடை. விடை என்றால் மாடு என்று அர்த்தம். அது நம் ஆத்மாவைக் குறிக்கும்.

அன்பர்களே! இதுவரை கூறப்பட்டதெல்லாம் பழைய சிதம்பர வழிபாட்டு முறை. சமய வழிபாட்டு முறை. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் நம் பெரியோர் கூறிய பதில் இது. ஆனால் இந்த பதில் முழுமையான பதில் அல்ல.

ஏனென்றால் சமய மதத்தில் இந்த உடல் அநித்தியமென்றும், இது அழிந்தே போகுமென்றும், ஆன்மாவே நித்தியமென்றும், இது அழியாதது என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் செய்த கர்மங்களையெல்லாம் நாம் அனுபவித்தே தீரவேண்டும் எனவும், ஆன்மாவிற்கு இத்தேகம் பந்தமாகும் எனவும் கூறப்பட்டுள்ளது. அதனால்தான் எத்தனையோ மகான்கள் தங்கள் தேகத்திற்கு நோய் வந்தபோதும் அதை தீர்த்துக் கொள்ளாமல் உடலை விட்டு நீங்கினர்.

ஆனால் இங்குதான் நம் பெருமானார் சற்று வேறுபடுகின்றார். இந்த உடல் அநித்தியம்தான் ஆனால் திருவருளால் இதை நித்தியமாக மாற்றிக் கொள்ள முடியும் என்றார். எனவேதான் நம்முடைய கர்மங்களை நாமே தீர்த்துக் கொள்ளும் வகையில் ஒரு புனித கங்கையை வடலூர் பெருவெளியில் 23-05-1867ல் உருவாக்கினார். அதுதான் சத்திய தருமசாலை. எத்தனை கோடி பிறவிகளில் செய்த கர்மங்களையும் அழிக்கும் மிகப் பெரிய கங்கை நதியே இச்சத்திய தருமசாலை.

ஏன் இந்த சத்திய தருமசாலையை நம் பெருமானார் உருவாக்கினார்? ஒரு விஷயத்தை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் எத்தனை முறை இறைவனை தரிசிக்கின்றோம் என்பது முக்கியமல்ல. இறைவனது கடைக்கண் பார்வை ஒரேஒரு முறையாவது நம்மீது படுவதுதான் முக்கியம். அப்போதுதான் நம்முடைய எல்லா துன்பங்களும் நீங்கும்.

இறைவனின் பார்வையை நம் பக்கம் திருப்பவேண்டுமேயானால் அவர் படைத்த உயிர்கள் துன்பப்படும்போது அதைக் கண்டு மனம் இரங்கி பரோபகாரம் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர் நமக்கு நிறைய செல்வத்தை அளித்துள்ளார். நிறைய சக்தியை கொடுத்திருக்கிறார். நிறைய அறிவை கொடுத்திருக்கிறார். நிறைய நல்ல குணங்களை கொடுத்திருக்கிறார். இதைக் கொண்டு துன்பப்படும் ஜீவர்களுக்கு நம்மால் இயன்ற தொண்டினை அனுதினமும் செய்ய வேண்டும். அப்போதுதான் இறைவனின் கடைக்கண் பார்வை நம் பக்கம் திரும்பும். இறைவனின் உள்ளம் குளிரும்.

இதுவரை தோன்றிய எல்லா கோயில்களிலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நான்கு படிகளை வைத்திருப்பார்கள். கோயிலிலுள்ள இறைவனுக்கு முதலில் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

அது சரியை. பின் பூஜைகள் செய்ய வேண்டும் அது கிரியை. அந்த இறைவனை தனக்குள் காண முயற்சிக்க வேண்டும் அது யோகம். பிறகு இறைவனையும் ஆத்மாவையும் பார்த்துவிடுகின்ற அனுபவ நிலைக்குச் செல்ல வேண்டும். இது ஞானமாகிய நான்காவது நிலை.

ஆனால் நம் வள்ளல் பெருமான் ஐந்தாவதாக ஞான சரியை என்றவொரு நிலையை அருளியுள்ளார்கள். அதாவது ஆத்மாவை மட்டுமல்ல இந்த உடலையும் ஞானமாக மாற்றிக் கொள்ள வேண்டும். இங்கு இருக்கின்ற அருட்பெருஞ்ஜோதியின் வடிவம் 'ஞானவடிவம்', இங்கிருக்கிற ஜோதி சாமானியமான ஜோதி அல்ல அது 'அருள்ஜோதி'. இதிலிருந்து வருவது அருள் வெளிச்சம். அப்போது இதிலிருந்து மூன்று விதமான வெப்பம், மூன்று விதமான வெளிச்சம் வரும்.

பௌதிக வெப்பத்திலிருந்து சூரிய, சந்திர, நெருப்பு என்கிற பௌதிக வெளிச்சம் தோன்றும். இது இருள் வெளிச்சம். அடுத்து அன்பு–ஜீவகாருண்யம் என்பது சூக்கும உஷ்ணம். அதிலிருந்து வருவது சூக்கும ஒளி - ஆத்ம ஒளி. காரண உஷ்ணம் என்பது அருள். காரண உஷ்ணத்திலிருந்து வருகின்ற காரண வெளிச்சமே இந்த பிரபஞ்சத்தை முழுவதும் படைத்தது. அந்த அருள் பூரணமாக நிறைகின்றபோது அருட்பெருஞ்ஜோதியாக விளங்குகின்றது.

இனி ஞானசபைக்கு வருவோம். இங்கு இருக்கின்ற சாமிக்கு நீங்கள் தண்ணீர் எடுத்துச் சென்று அபிஷேகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பூஜை முதலான காரியங்கள் செய்து அஷ்டோத்திரம் செய்வதுமில்லை. இங்கு யோகம் செய்கிறார்களா என்றால் அதுவுமில்லை. ஏனென்றால் இதற்கு பெயர் ஞான சபை. நேரடியாக ஞானத்திற்குச் செல்கின்ற இடம்.

இப்போது நமக்குள் "சரியை, கிரியை, யோகம் என்கிற மூன்று படிகளும் இல்லாமல் நம் பெருமானார் இந்த சபையை அமைத்துள்ளார்களே?!" ஒரு கேள்வி வரும். ஆனால் அப்படியல்ல.

நம் பெருமானார் பூரண அறிவை அடைந்தவர். ஆகையால் அவர் கூற வருவதை நன்றாக கவனிக்க வேண்டும். இந்த மூன்றும் இருக்கிறது. சரியை, கிரியை, யோகம் எல்லாம் நீங்கள் ஒரே செயலில் முடித்து விடுகின்றீர்கள். அதாவது, தருமசாலையில் நீங்கள் தருமம் செய்துவிட்டு வந்தாலே இந்த மூன்று செயலும் அடங்கிவிடுகின்றன்.

'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்ற நூலில் நம் வள்ளல் பெருமான் அருளிய முக்கியமான இரண்டு கோட்பாடுகளை கவனிப்போம். 'ஜீவகாருண்யம் என்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலை சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல் எக்காலத்தும், அடையாத இன்ப வீட்டை அடைந்து, அவ்வீட்டுக் கதவை திறந்து கொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

புண்ணிய பூமிகளை வலம் செய்தல், புண்ணிய தீர்த்தங்களிலாடல், புண்ணிய தலங்களில் வசித்தல், புண்ணிய மூர்த்திகளை தரிசித்தல், தோத்திரம் செய்தல், ஜெபம் செய்தல், விரதம் செய்தல், யாகம் செய்தல்,

பூஜை செய்தல் முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும் பத்தர்களும், இருடிகளும்; உணவை நீக்கி, உறக்கத்தை விட்டு, விடயச் சார்புகளைத் துறந்து, இந்திரியங்களை அடக்கி மனோலயம் செய்து யோகத்திலிருக்கின்ற யோகிகளும்; அளவிறந்த சித்தியின்பங்களைப் பெற்ற சித்தர்களும், நித்திய அநித்தியங்களை அறிந்து எல்லாப் பற்றுகளையும் துறந்து பிரமானுபவத்தை பெற்ற ஞானிகளும் ஜீவகாருண்யம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால், மோட்சமென்கிற மேல் வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்தில் காத்திருந்து மீளவும் அத்திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்களல்லது கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழ மாட்டார்கள் என்று உண்மையாக அறிய வேண்டும்.' எப்படி தெளிவாக அருளியுள்ளார் பாருங்கள் நம் பெருமானார்.

'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று நம் முன்னோர் அன்று சொன்னதை இன்று நிச்சயப்படுத்துகின்றார் நம் வள்ளல் பெருந்தகை. சம்சாரிகளானாலும் அவர்கள் ஜீவகாருண்யம் என்கிற திறவுகோலை சம்பாத்திருந்தால் அவர்களுக்கு மோட்சம் உண்டு. யோகிகளானாலும், முனிவர்களானாலும் ஜீவகாருண்யம் இல்லையென்றால் அவர்கள் மோட்ச வீட்டினுள் சென்று இன்பத்தை அடைய மாட்டார்கள்.

சன்மார்க்கத்தில் நீ சம்சாரியா? இல்லை சன்யாசியா? என்ற கேள்விக்கே இடம் இல்லை. நீ எத்தனை உயிர்களுக்கு துன்பத்தை துடைத்து ஜீவகாருண்யம் செய்திருக்கின்றாய்? இந்த ஒரேவொரு கேள்விதான் இறைவனின் பெயரேட்டில் இருக்கும். நம்முடைய உயிரிரக்கத்தின் அளவைப் பொருத்தே முக்தி நிலையோ அல்லது சித்தி நிலையோ கிடைக்கும்.

இன்னும் தெளிவாகச் சொன்னால், தருமசாலையில் உங்களால் முடிந்த அளவு பணமாகவோ அல்லது பொருளாகவோ அல்லது நீங்கள் எதுவுமே இல்லாத ஏழையாக இருந்தால் உங்கள் தேகத்தினாலோ தொண்டு செய்யுங்கள். நம் பணியை நம் பிள்ளை செய்கின்றானே என அருட்பெருஞ்ஜோதி இறைவன் உளம் மகிழ்ந்து நம்மை பார்க்க ஆரம்பிப்பார். இப்போது ஞானசபையில் ஜோதி தரிசனம் கண்டு பிறகு உங்கள் கோரிக்கைகளை சொல்லுங்கள். எல்லாமே சித்தியாகும்.

சரி. இந்த கோயில் 84 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இந்த ஞானசபை மட்டுமில்லாமல் 84 ஏக்கர் நிலமும் கோயில்தான். இந்த பெருவெளி முழுவதுமே கோயில்தான்.

இந்த ஞான சபையில் நாம் கவனிக்க வேண்டிய இரண்டு செய்திகள் உண்டு. நன்றாக கவனிக்க வேண்டும். திருஅருட்பா முழுவதும் 5818 பாடல்கள் அகவல் 1596 வரிகள் இவை அனைத்தையும் ஒரு கட்டிடமாக பாமரருக்கும் விளங்கும் வண்ணம் அமைத்துள்ளார் நம் பெருமானார். ஆக முதலில் நாம் கவனிக்க வேண்டியது இங்கு பலிபீடம் கிடையாது.

பிற ஆலயங்களில் குறைந்தது நீங்கள் தேங்காய், பழம் போன்றவற்றை பலியாக கொடுக்க வேண்டும். சிறுதெய்வங்களாக இருந்தால் ஆடு, கோழி இவற்றை பலி கொடுக்க வேண்டும். ஆனால் இங்கே ஞானசபையில் நீங்கள் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.

ஒரு தாய் தன் பிள்ளைக்கு ரத்தத்தையே பாலாக்கி ஊட்டுகின்றாள் என்றால் நாளை நம் பிள்ளை நம்மைக் காப்பாற்றும், நம்மை உட்காரவைத்து உணவு கொடுக்கும் என்றெல்லாம் எதிர்பார்த்தா பால் கொடுக்கிறாள்? இல்லை. அன்பு. தன் பிள்ளை மீது தான் வைத்த அன்பு.

அதுபோலவே இங்கே அருட்ஜோதி தெய்வம் தன்னை உண்மையாக நாடி வருகின்ற தன் பிள்ளைகளுக்கு தன் பெருந்தயவாகிய அருளை வாரி வழங்கும் என்பதை உணர்த்தவே இங்கே நம் பெருமான் பலி பீடத்தை வைக்கவில்லை.

இரண்டாவது ஞான சபையின் வலப்புறம் அமைந்துள்ள எழுவார் மேடை. இதை அனேகம்பேர் கவனித்திருக்க வாய்ப்பில்லை. இது இதுவரை தோன்றிய எந்த ஆலயத்திலும் இல்லாத ஒரு அமைப்பு.

எழுவார் என்றால் எங்கிருந்து எழுவார்? தூக்கத்திலிருந்து எழுவார். எந்த தூக்கம்? மரணம் எனும் பெருந் தூக்கத்திலிருந்து எழுவார் என்பதை உணர்த்தவே இம்மேடை அமைக்கப்பட்டுள்ளது.

அதாவது நம் வலப்பக்கம் ஓடுகின்ற நாடி மேலேறி வலம் இடமாக மாறி மூளையின் இடப்பக்கம் சென்றால் செத்தவர்கள் எழுவார் என்பதே இதன் தத்துவார்த்தம். இந்தக் கலையைத்தான் இங்கே சன்மார்க்கத்தில் நம் பெருமானார் கற்றுத்தருகின்றார்கள்.

'பிறந்தன அனைத்தும் இறக்கும் இறந்தன அனைத்தும் பிறக்கும்' என்பது பழைய பழமொழி. நம் பெருமனார் சன்மார்க்கத்திற்கு அழைக்கும்போதே 'மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்' என்றே அழைக்கின்றார்.

ஆகவே அன்பர்களே! அளப்பரிய பொக்கிஷங்கள் நிறைந்ததே இந்த ஞானசபை. ஒவ்வொரு மாதமும் பூசத்திற்கு நீங்கள் வந்தீர்களானால் பெறுதற்கரிய சத் விஷயங்களைப் பெற்று சாதனையாளர்களாக மாறலாம்.

திருச்சிற்றம்பலம்

பவமே தவிர்ப்பது சாகா வரமும் பயப்பதுநல்
தவமே புரிந்தவர்க்கு இன்பம் தருவது தான்தனக்கே
உவமேயமானது ஒளிஓங்குகின்றது ஒளிரும் சுத்த
சிவமே நிறைகின்றது உத்தர ஞான சிதம்பரமே - திருஅருட்பா

உலகம் எலாம் தொழ உற்றது எனக்குஉண்மை ஒண்மைதந்தே
இலக எலாம்படைத்து ஆருயிர் காத்தருள் என்றது என்றும்
கலகமிலாச் சுத்த சன்மார்க்க சங்கம் கலந்தது பார்த்
திலகம் எனாநின்றது உத்தர ஞான சிதம்பரமே. - திருஅருட்பா

# தெய்வத் தீந்தமிழ்

## திருஅருட்பா



அன்பு உள்ளங்களே!


நமக்கும் மிருகங்களுக்கும் உள்ள வேறுபாடுகளுள் முக்கியமான ஒன்று நமது வாய் என்கின்ற உறுப்பு. அதனால்தான் விலங்குகளை வாயில்லா ஜீவர்கள் என்று கூறுகின்றோம். நமக்க வாய் கொடுக்கப்பட்டதே இறைவனது அருட்புகழை பேசுவதற்கே. இதைத்தான் நம் பெருமானார் “பெருமைபெறு நினதுபுகழ் பேச வேண்டும் பொய்மை பேசாதிருக்க வேண்டும்” என்று அருளியுள்ளார். திருமூல நாயனார் இந்த தேகத்தை ஆலயமாகக் கருதி “வாய் கோபுர வாசல்” என்று அருளியுள்ளார். வாயாகிய கோபுர வாசலின் வழியாகத்தான் நாம் இறைவனைக் காண செல்ல முடியும் என்பதே இதன் தத்துவார்த்தம். எனவே இறைவன் திருவாய் மலர்ந்தருளி நமக்களித்த இத்திருஅருட்பாக்களைப் பாடி இறைவனடி சரணடைவோமாக!

அகரநிலை விளங்கு சத்தர் அனைவருக்கும் அவர்பால்
அமர்ந்த சத்திமார் அவர்கள் அனைவருக்கும் அவரால்
பகரவரும் அண்டவகை அனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகள் அங்கனைத்தினுக்கும் பதங்கள் அனைத்தினுக்கும்
இகரமுறும் உயிர் எவைக்கும் கருவிகள் அங்கெவைக்கும்
எப்பொருட்கும் அனுபவங்கள் எவைக்கும் முத்திஎவைக்கும்
சிகரமுதல் சித்திவகை எவைக்கும்ஒளி வழங்கும்
திருச்சிற்றம்பலந்தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர். 1

எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார்
ஈயினும் நாயினும் இழிந்தேன்
புழுவினும் சிறியேன் பொய்விழைந்து உழல்வேன்
புன்மையேன் புலைத்தொழில் கடையேன்
வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன்
மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரியேன் அம்பலக்கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 2

திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருஉருக்காட்டாயோ
உருக்கி அமுதூற்றெடுத்து என்உடம்புயிரோடு உளமும்
ஒளிமயமே ஆக்குற மெய்உணர்ச்சி அருளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னைஎன்னுட் கலந்தே
கங்குல்பகல் இன்றிஎன்றும் களித்திடச் செய்யாயோ
செருக்கருதாதவர்க்கு அருளும் சித்திபுரத்தரசே
சித்தசிகாமணியே என்திருநட நாயகனே. 3

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



பொன்னொப்பதாம் ஒருநீ போற்றிய சொன்மாலையென்றே
என்னப்பன் என்சொல் இசைந்தணிந்தான் – தன்ஒப்பில்
வல்லான் இசைந்ததுவே மாமாலை அற்புதம்ஈது
எல்லாம் திருவருட் சீரே.
பின்முன் அறியேன் நான் பிதற்றிய சொன்மாலை எலாம்
தன்முன் அரங்கேற்று எனவே தான்உரைத்தான் – என்முன்
இருந்தான் என்னுள்ளே இருக்கின்றான் ஞான
மருந்தான் சிற்றம்பலத்தான் வாய்ந்து. – திருஅருட்பா

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**
**வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!**


**என்றும் சன்மார்க்கப் பணியில்...**

# ABT LIMITED

Corp. Off: 180, Race Course Road
Coimbatore - 641 018.
Phone: 0422 - 4333666
Fax: 0422 - 4333100

# வாழும் கலை

கோவை சிவப்பிரகாச சுவாமிகள் சொற்பொழிவிலிருந்து...

அன்பு உள்ளங்களே! சென்ற மாதக் கட்டுரையில் மண்ணாகிய இந்த தேகத்தை பொன்னாக மாற்றம் செய்வதற்கே இம்மனித தேகம் எடுத்திருக்கிறோம் என்பதை தெரிந்து கொண்டோம். அதற்கு முதலில் நாம் இறைவனிடம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் கீழான உலக சிந்தனைகளை ஏற்படுத்தும் நூல்களைப் படிக்காமல் உயர்ந்த தெய்வீக உணர்வுகளை உண்டாக்கும் தேனாகிய திருஅருட்பாக்களை ஓதி உணரவேண்டும் என்பதையும் தெரிந்தோம்.

எந்த உணவை உண்கிறோமோ அந்த உணவை ஜீரணித்து அதன் தன்மையை தன் தன்மையாய் மாற்றிக்கொள்ளும் குணம் இந்த உடலுக்கு உண்டென்றால் அருட்பெருஞ்ஜோதிக் கடவுளையே உணவாக உட்கொண்டால் அந்த இறைத்தன்மையை இத்தேகம் பெறும் எனும் உண்மையையும் உணர்ந்துகொண்டோம்.

மேலும் ஆரம்பத்தில் இன்பத்தையும் பிறகு துன்பத்தையும் கொடுக்கும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எனும் ஆசைகளுக்குள்ளாகி அல்லல்படும் நமக்கு நல்வழி காட்ட வரும் ஞானிகளை நாம் மதிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டோம்.

அதுமட்டுமல்லாது நாய் கடித்த தென்னம்பழம் எவ்விதம் நாய்க்கும் உதவாமல் பிறருக்கும் உதவாமல் போய்விடுகிறதோ அதுபோல் நம்மிடமுள்ள செல்வத்தை தானும் அனுபவிக்காமல், பிறருக்கும் கொடுக்காமல் வாழ்வதால் எந்தப் பயனும் இல்லை என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்டோம். இனி மேலும் காண்போம்.

காகத்திற்கு நீங்கள் உணவு வைத்தீர்களானால் அது எல்லா காக்கைகளையும் கரைந்து கரைந்து கூவி அழைத்து எல்லோருடனும் பகிர்ந்து உண்ணும். இந்த காக்கைக்கு மற்றோர் குணமும் உண்டு. அது ஏதேனும் ஒரு உணவுப் பொருளை திருடிக் கொண்டு சென்றால் தான் மட்டுமே உண்ணும். அச்சமயம் பிற காகங்களை அழைக்காது.

ஏனென்றால் முன்னர் கிடைத்த உணவு எவ்வித தீங்கும் இல்லாது வந்த உணவு. அதனால் அதை எல்லோருடனும் பகிர்ந்து உண்டது. பின்னர் வந்த உணவு தீய வழியில் சம்பாதித்த உணவு. அதனால், தான் மட்டுமே அதை உண்டது. அதுபோல் தீய வழியில் ஒருவர் பொருளைச் சேர்த்தால் அவர் செல்வம் தரும வழியில் செல்லாது. மேலும் அதை சம்பாதித்தவருக்கு அது துன்பத்தையே கொடுக்கும். தரும வழியில் சம்பாதித்த செல்வம்தான் நற்காரியங்களுக்குப் பயன்படும். இதனையே வள்ளுவரும் பின் வரும் இரண்டு குறட்பாக்களில் விளக்குகின்றார்.

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.**

அதாவது, பாவத்திற்கு அஞ்சி சேர்த்த பொருளை பலருடன் பகிர்ந்து உண்பவனின் சந்ததி எந்நாளும் அழியாது.

**அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதுஇன்றி வந்த பொருள்**

அதாவது, சேர்க்கும் திறம் அறிந்து, தீமையொன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்ட பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

அதேபோல் ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவரும் தருமம் செய்ய வேண்டும். ஒருவர் செய்கின்ற தருமத்தால் இன்னொருவர் பலன் பெற முடியாது. கர்ணன் செய்த தருமத்தால் துரியோதனன் புண்ணியம் பெறவில்லை. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், கர்ணன் கொடுத்த செல்வம் எல்லாமே துரியோதனன் கொடுத்தது. கர்ணனுக்கு ஏது சொத்து?

இருந்தபோதும் கர்ணனுக்கே மோட்சம் கிட்டியது. துரியோதனனுக்கு அல்ல. இதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து நாம் எந்த அளவிற்கு ஆகாரத்தை குறைத்துக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு நம்முடைய ஆயுள் விருத்தியாகும். ஆகாரம் அதிகமானால் ஆயுள் குறையும். “உண்டி சுருங்கில் உபாயம் பல உள” என்று திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

முடிந்த அளவு நமக்கு நாமே வைத்தியர்களாக மாறிவிடவேண்டும். இல்லையென்றால் பூலோக நரகமாகிய மருத்துவமனைகளுக்கே செல்ல வேண்டிவரும். திருவள்ளுவப் பெருந்தகை ‘மருந்து’ என்ற அதிகாரத்தில்

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்**

அதாவது, முன் உண்ட உணவு செரித்ததை அறிந்து பின்னர் ஆகாரம் உட்கொண்டால் இந்த உடலுக்கு மருந்து என்பதே தேவையில்லை என்கிறார்.

நாம் வெள்ளிக்கிழமை விரதம், சனிக்கிழமை விரதம் என்று எத்தனையோ விரதங்களை இருக்கின்றோம். ஆனால் ஒரு முக்கியமான விரதம் இருக்கின்றது.

ஜெயப்பிரகாஷ் நாராயணன், பத்மாவதி என்ற தம்பதியர் நம் நாடு சுதந்திரம் அடையும் வரை ஒரு விரதம் இருந்தார்கள். ஒருநாள் காலையில் இருவருக்கும் திருமணம் நடந்தது. மாலையில் இருவரும் மகாத்மா காந்தியின் முன் சென்று ‘நாங்கள் நம் நாடு சுதந்திரம் அடையும் வரை இல்லற இன்பத்தில் ஈடுபடுவதேயில்லை என்று உறுதி கொண்டுள்ளோம்’ என்று கூறினர். மகாத்மா அதிர்ந்துவிட்டார்.

‘இன்று காலையில்தானே உங்களுக்கு திருமணம் நடந்தது. யார் உங்களுக்கு இந்த விரதத்தை எடுக்கச் சொன்னது?’ என்று கேட்டார் மகாத்மா. அதற்கு நாராயணன் அவர்கள் என் மனைவி பத்மாவதிதான் எடுக்கச் சொன்னார் என்றார். நாடு சுதந்திரம் அடையும் வரை அவர்கள் அந்த விரதத்தை எடுத்தார்கள்.

ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கே இப்படியெல்லாம் விரதம் இருந்திருக்கிறார்கள் என்றால் நாம் ஆன்மிகத்தில் மேலேறி இப்பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்கு எப்படிப்பட்ட விரதம் இருக்கவேண்டும். மகாவீரர் எந்த போரில் ஈடுபட்டார்?

அவருக்கு எப்படி மகாவீரர் என்கிற பட்டம் கிடைத்தது? இந்த பிரம்மச்சரிய விரதம்தான் அவருக்கு அந்த பட்டத்தை பெற்றுத் தந்தது.

நம் வள்ளல் பெருமான் போகாப் புனல் என்று சொல்கின்றாரே அது இதுதான். நம் உடலில் உள்ள விந்தணு கீழ்நோக்கிச் சென்றால் அது சிற்றின்பம். மேல்நோக்கிச் சென்றால் அது பேரின்பம். விந்து மேலேறுவதற்கே நாம் முயற்சி செய்ய வேண்டும். அதற்கான பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

இதையே நம் வள்ளல் பெருமானார் அருட்பெருஞ்ஜோதி அகவலில்

**இரத்தம் அனைத்தும் உள்இருகிட சுக்கிலம்**

**உரத்திடை பந்தித்து ஒருதிரள் ஆயிட**

என்றார். இதுதான் போகாப் புனல். இதை உணர்ந்து பார்ப்போமேயானால் நாம் இந்த விரதத்தை மேற்கொள்வது மிகமிக முக்கியம் என்பது தெளிவாகின்றதல்லவா.

உயிராற்றல் உடலைவிட்டு சென்ற பிறகு நாம் ஆன்மீக சாதனைகளில் ஈடுபடவே முடியாது. இந்த விஷயத்தில் நாம் நாயைவிடவும் கீழானவர்களாகவே இருக்கிறோம். ஏனென்றால் நாய் பதினோறு மாதங்கள் பிரம்மச்சரிய விரதம் இருக்கும். இப்போது சிந்தித்துப் பாருங்கள் நாம் ஒரு நாயை விடவும் கீழானவர்களாகத்தானே இருக்கின்றோம்.

மேலும் மற்றுமொரு முக்கியமான விரதத்தை எடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கு முன் ஒரு உண்மைச் சம்பவத்தைக் காண்போம்.

ஒருமுறை மகான் பாம்பன் சுவாமிகளை ஒரு இல்லத்திற்கு அழைத்திருந்தார்கள். அந்த அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவரும் அவர்களது இல்லத்தில் எழுந்தருளினார். அவர்தம் பக்தர்கள் எல்லோரும் அந்த இல்லத்தில் கூடியிருந்தனர். மகானுக்கும் மற்றும் அங்கு வந்திருந்தோர் அனைவருக்கும் உணவு தயாராகிக் கொண்டிருந்தது.

திடீரென மகான் பாம்பன் சுவாமிகள் எழுந்து அந்த வீட்டை விட்டு வெளியேறினார். கூடியிருந்தோர்க்கு ஒன்றும் புரியவில்லை. அந்த இல்லத்தைச் சேர்ந்தவர்கள் மகானிடம் சென்று 'ஏன் செல்கிறீர்கள்?' என்று வினவ, அதற்கு மகான் 'இந்த இல்லத்தில் ஒரு சாவு விழுந்துவிட்டது. அதனால் இங்கே நான் உணவருந்த மாட்டேன்' என்று கூறினார்.

பதறிப்போன அந்த இல்லத்தார் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அப்போது மகான் அந்த இல்லதாரின் வீட்டின் உள்ளே உள்ள சுவரைச் சுட்டிக்காட்டினார். அங்கு ஒரு பூச்சி நசுக்கப்பட்டு இறந்திருந்தது. விசாரித்ததில் அந்த வீட்டுச் சிறுவன் விளையாட்டாக அந்த பூச்சியை விரலால் நசுக்கிக் கொன்றுவிட்டான்.

நாம் சாதாரணமாக பூச்சிதானே என்று நினைப்போம். ஆனால் மகான்களுக்கு அதுவும் இந்த பூமியில் வாழ வந்த ஒரு உயிர் என்றே கருதுகின்றனர்.

இதனின்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் எந்த உயிரையும் கொல்லாமலும், அதன் சதையை உண்ணாமலும் இருக்க வேண்டும். இது தான் அடுத்த விரதமாகிய 'கொல்லா விரதம்'.

ஒரு வீட்டில் மேலே ஏறுவதற்கு ஏணி வேண்டும். அந்த ஏணிக்கு இரண்டு மரம் வேண்டும். ஒன்று கொல்லாமை மற்றொன்று புலால் உண்ணாமை. பிறகு அதில் 36 படிகளை போடவேண்டும். மரமே நடாமல் எப்படி ஏணி அமைக்க முடியும்? வள்ளல் பெருமான் கூறுகின்ற சுத்த சன்மார்க்கத்திற்கு உயிர் நாடியே சைவம்தான். மேலும் அசைவம் உண்போர் கையால் உணவு வாங்கி உண்டாலே ஒரு பசுமாட்டை கொன்று தின்ற பாவம் வந்து சேருமாம். புத்தர் ஒரு மரம்தான் நட்டார். இன்றளவில் 34 நாடுகளில் புத்தமதம் பரவியிருக்கிறது. அங்கிருக்கும் புத்த துறவிகளில் அனேகம்பேர் அசைவத்தையே உண்கின்றனர். இது எந்த விதத்தில் நியாயம். ஆகவே நாம், மற்றோர் உயிரைக் கொல்லாமலும் அந்த ஊனை உண்ணாமலும் இருப்பது மிக மிக முக்கியம்.

மேலும், கோயிலுக்கு போனாலே நம் துன்பமெலாம் நீங்கி விடுமா? ஒருவன் இறைவனிடம் சென்று 'நான் இத்தனை துன்பப்படுகின்றேனே எனக்கு இறைவா நீ நல்லது செய்ய கூடாதா?' என்று கேட்டான்.

அதற்கு அந்தக் கோயிலில் இருந்த தெய்வம் 'நான் பட்ட துன்பத்தில் நூற்றில் ஒரு சதவிகிதம் கூட நீ அடைந்திருக்க மாட்டாய்' என்றது.

ஆம். சிந்தித்துப் பாருங்கள். கோயிலில் உள்ள சிலை அது சிலையாவதற்கு முன் சிற்பியின் உளியால் எத்தனை துன்பங்களை அடைந்திருக்கும். அந்த துன்பங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டதால்தானே இன்று கோயிலில் அனைவரும் அதை கையெடுத்து வணங்குகின்றார்கள்! மேலும் மண்ணில் கிடந்த தங்கம் பொற்கொல்லன் கொடுத்த துன்பத்தை பொறுத்துக் கொண்டதால்தானே எல்லோரும் மதிக்கத்தக்க ஒரு அணிகலனாக மாற்றம் பெறுகின்றது!

வள்ளல் பெருமான் அகவலில் 'துன்பளித்து ஆங்கே சுகமளித்து உயிர்களை அன்புறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி' என்று பாடியுள்ளார். துன்பம் கொடுத்தாலும் இறைவன் அருளைக் கொடுப்பான். இன்றெல்லாம் பக்தர்கள் ஒரு சோதனை வந்தால் தெய்வத்தையே மாற்றுவதற்கு தயாராகிவிடுகின்றார்கள்.

ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லா தெய்வங்களும் 'அருட்பெருஞ்ஜோதி' என்ற பெருந்தெய்வத்திடமிருந்தே தோன்றியது. ஆக தெய்வத்திற்கெல்லாம் தெய்வம் அருட்பெருஞ்ஜோதி தெய்வம்.

ஒரு பொருளை நெருப்பில் இட்டால் அது அந்த பொருளின் குற்றங்களை எல்லாம் நீக்கி தன்மயமாக மாற்றமடையும் வரை தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கும். அதுபோல் அருட்பெருஞ்ஜோதி தெய்வமும் தன்னை சரணடையும் ஜீவர்களின் குற்றங்களையெல்லாம் போக்கி தன்மயமாக்கிக் கொள்ளும்.

மேலும், நம் உடல் பஞ்ச பூதத்தால் ஆனது. இதில் முக்கியமானது காற்று, நெருப்பு, நீர். இதிலும் முக்கியமானது நெருப்பும், நீரும். இவை இரண்டும் சமமாக இருந்தால்தான் நாம் உயிர்வாழ முடியும். இங்கு நெருப்பு என்பது சிவன், நீர் என்பது விஷ்ணு. நீர் அதிகரித்தால் ஜன்னி வந்துவிடும். நெருப்பு அதிகரித்தால் ஜுரம் வந்துவிடும். இந்த இருவரும்

சமமாக இருப்பதால்தான் நாம் வாழ முடிகிறது. பிறகு எதற்கு சமயத்தின் பெயரால் சண்டையிட்டு மாண்டுபோகின்றோம்?

மேலும் ஒளியின் வடிவம் நடராஜர், இருளின் வடிவம் விஷ்ணு. இரண்டும் ஒரே இடத்தில்தான் இருக்கிறது.

ஆக சமயத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் சண்டையிட்டுக் கொள்வதை தவிர்க்கக் கூடிய விரதத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும். இக்கட்டுரையினின்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவெனில்: மண்ணாகிய தேகத்தை மேன்மைப்படுத்த நாம் மேற்கொள்ள வேண்டியவை

1. **கடவுள் ஒருவரே; அவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.**
2. **நாம் எப்போதும் கடவுளுக்கு நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டும்.**
3. **தேனினும் இனிய திருஅருட்பாவை தினந்தோறும் ஓதி இறைவனிடம் சரணடைய வேண்டும்.**
4. **மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை என்பவற்றில் சிக்கி துன்பத்தில் உழலும் நாம், வள்ளல் பெருமான் காட்டும் சுத்த சன்மார்க்க நெறியில் நின்று அல்லலற்று வாழ வேண்டும்.**
5. **அனுதினமும் ஜீவகாருண்ய ஒழுக்க நெறியில் நின்று எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் கொண்டு புலால் உணவை மறுத்து நம்மால் இயன்றவரை பசித்த ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.**
6. **நம்முடைய தலைவராகிய அருட்பெருஞ்ஜோதி இறைவனை நாம் எப்போதும் நாடியிருக்க வேண்டும்.**
7. **நாம் அனைவரும் இறைவனுடைய பிள்ளைகளாதலால் நமக்குள் எந்த சாதி, சமய, இன, மொழி பேதமின்றி எல்லோரும் சகோதரர்களே என்பதை உணர்ந்து வாழ வேண்டும்.**
8. **ஆகார வகையில் அளவறிந்து முறையறிந்து உண்டும், பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டித்தும் பெறுதற்கரிய இம்மனித தேகத்தை பாதுகாக்க வேண்டும்.**

*திருச்சிற்றம்பலம்*

| | |
|---|---|
| திருநெறி ஒன்றே அதுதான் சமரச சன்மார்க்கச்<br>சிவநெறி என்று உணர்ந்துஉலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு<br>வருநெறியில் எனையாட்கொண்டு அருளமுதம் அளித்து<br>வல்லப சத்திகளெல்லாம் வழங்கியஓர் வள்ளல்<br>பெருநெறியில் சித்தாடத் திருவுளம் கொண்டருளிப்<br>பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே<br>கருநெறிவீழ்ந்து உழலாதீர் கலக்கம் அடையாதீர்<br>கண்மையினால் கருத்து ஒருமித்து உண்மை உரைத்தேனே. | தி<br>ரு<br>அ<br>ரு<br>ட்<br>பா |

Advertisement

# மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.


வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!

Anti-Virus ( Free )

OS ( Licenced )







பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!
Old Refurbished New

## BeyondexC Network Solutions

பியான்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com

# உள்ளது உரைத்தல்


ஸ்ரீமுக வருடம், ஐப்பசி மாதம், 7ம் நாள், புதவாரம், பகல் 8 மணிக்கு மேட்டுக்குப்பம் சித்தி வளாகத் திருமாளிகையில் முதன் முதலில் சுத்த சன்மார்க்க கொடி கட்டினவுடனே நடந்த நிகழ்ச்சியின் குறிப்பு.



இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் இனியும் வீண்காலம் கழித்துக்கொண்டிராதீர்கள்.

இது முதல் சாலைக்கு ஆண்டவர் போகின்ற பத்துத்தினமாகிய கொஞ்சக்காலம் வரையில் நீங்கள் எல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எதுவென்றால் நாம் நம்மடைய நிலை எப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிஷ்டிகின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது. அதற்குத்தக்கபடி நீங்கள் ஒருமித்தாவது அல்லது தனித்தனியாகவாவது அல்லது உங்கள் அறிவிற்கும் ஒழுக்கத்திற்கும் ஒத்தவர்களுடன் கூடியாவது அல்லது தனியாகவும் விசாரிக்கலாம். இவ்விசாரணை முகத்திலிருந்தால் நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண்டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமாய் இருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத்திரை முதலில் நீங்கி விடும். அது நீங்கினால் மற்ற திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும்.

அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்டது என்றால் கருமைக்கு முதல் வர்ணமான பசுமை இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்க வேண்டுமென ஸ்தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும் இவ்வண்ணமாக இருக்கின்றபோதும், படுக்கின்றபோதும் இடைவிடாது இவ்விசாரத்தோடு ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்க வேண்டுமென்கின்ற முயற்சியுடன் இருந்தால் தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.



# பாடலும் பொருளும்

சொல்லொழிய பொருளொழியக் கரண மெல்லாம்
சோர்ந்தொழிய உணர்வொழியத் துளங்கா நின்ற
அல்லொழிய பகலொழிய நடுவே நின்ற
ஆனந்த அனுபவமே அதீத வாழ்வே
நெல்லொழியப் பதர்கொள்வார் போல இன்ப
நிறைவொழியக் குறைக்கொள் மதநெறியோர் நெஞ்சக்
கல்லொழிய மெய்யடியர் இதயமெல்லாங்
கலந்துகலந்து இனிக்கின்ற கருணைத் தேவே. - மகாதேவ மாலை (40)

இறைவனை அனுபவத்தில்தான் உணரமுடியுமே தவிர 'அதோ பார்' என்று வெளியிலே காட்ட முடியாது என்கிறார் வள்ளலார். ஒவ்வொரு சமயமும் தனித்தனியாகத் தனக்கென்று ஏற்படுத்திக்கொண்டு வழிபட்டு வருகின்ற அத்தனை தெய்வமும் சிற்சபையில் ஏற்படும் அனுபவம்தான்.

சைவம் முதலாக நாட்டும் பல
சமயங்கலெல்லாம் தனித்தனிக்காட்டும்
தெய்வம் இது வந்து பாரீர் திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி

அந்த இறைவன் வரக்கூடிய வீதியை வள்ளற் பெருமானார் அடையாளம் காட்டுகின்றார்.

மௌனத் திருவீதி வருவாயோ தோழி
வாராமல் வீண் பழி தருவாயோ தோழி

என்பார். தன் மனதைத்தான் தோழி என அழைத்து நீ மௌனமாக இருந்தால் இறைவனைக் காணலாமே என்கிறார். ஏனெனில் இறைவனாகிய அருட்பெருஞ்ஜோதி மனங்கடந்த ஒரு பெருவெளியில் அனுபவமாகும் தெய்வம்.

உரை மனங்கடந்த ஒரு பெருவெளிமேல்
அரைசு செய்து ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி


என்ற அகவல் வரிகளிலும் இதே கருத்தை வலியுறுத்துகின்றார். அந்த மௌனத் திருவீதி அனுபவத்தைத்தான் இந்தப் பாடலிலும் உறுதி செய்கிறார். மௌன அனுபவத்தில் என்னென்ன செயல்பாடுகள் இராது?

சொல்லொழிய - முதலில் வாய் பேசாது. பொருளொழிய - சொல்மட்டுமல்லாது அந்தச் சொல்லும் பொருளும் தோன்றாது.

நினைத்தல், விசாரித்தல், தீர்மானித்தல், செயல்படுதல் என்ற தொழிற்பாடுகளை உடைய **மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்களும் செயல்பாடற்று ஒழியும்.** அவை நான்கும் ஒருசேரச் செயல்பாடற்று நிற்பதையே சோர்ந்து ஒழிய என்றார். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இந்திரியங்களைச் சொல்லவில்லையே என எண்ணலாம், ஆனால் கரணங்களே அடங்கி ஒழியும் போது இந்திரியங்களை இவ்விடத்துத் தனியாகச் சொல்லவேண்டுவதில்லை. மருத்தவமனையில் மனிதன் செயல்பாட்டை நிறுத்தவே மயக்க மருந்து கொடுக்கின்றார்கள். மயக்க மருந்தினால் மயக்கம் உற்றிருப்பவரின் இந்திரியங்கள் எதுவும் செயல்படாது. இது நாம் காணும் காட்சி. கரணங்கள் அடங்கி அந்த உணர்வு போனதும் இரவோ பகலோ ஒன்றும் தெரியாது. நினைப்பு, மறைப்பு எதுவும் இருக்காது. இந்த நிலையை **அல்லொழியப் பகல் ஒழிய** என்றார். 'அல்' என்பது 'இருட்டு'.

வாக்கொழிந்து வாக்கின் பொருள் ஒழிந்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆகியவற்றின் செயலும் ஒழிந்து, உணர்வும் ஒழிந்து இரவுபகலற்ற நிலை தோன்றினால் அதன் நடுவே தோன்றும் ஆனந்த அனுபவமாக இறைவன் இருக்கின்றான். அந்த இறைவனுடைய வாழ்வு எவ்வாறு அதீதமானதோ அதே வாழ்வை அதீத வாழ்வை இந்த அனுபவம் பெற்றோருக்கும் அளிக்கக் கூடியவனாக இறைவன் இருக்கிறான். நெல்லையும் தொடாமல் யார்யாரெல்லாம் ஒன்றுக்கும் உதவாத பதரை உடுத்திக் கொள்கின்றார்களோ, அவர்களைப்போல இந்த மதவாதிகளும் எங்கும் நிறைந்து, எங்கும் விளங்கும் பூரணத்தை, நிறைவை விட்டுவிட்டு பலனில்லாத சிறுசிறு தெய்வங்களை கொள்கின்றார்களே! இந்த மதவாதிகளின் கல்லான நெஞ்சு ஒழிய உண்மையான அடியார்களின் இதயமெல்லாம் கலந்து கலந்து இனிக்கின்ற கருணை மிகுந்த இறைவனே என்று வாயாரப் பாடுகின்றார். எச்சமய முடிவுகளும் திருச்சிற்றம்பல அனுபவமே என்றும் ஒவ்வொரு சமயமும் கூறும் தெய்வம் தனித்தனியாக இல்லை என்றும் உணர்ந்த மெய்யடியர் தவம் செய்து பெற்றுக் கொள்ள அவர்கட்கே இன்பம் அளிக்கின்ற இறைவனே தேவ தேவனே!

திருச்சிற்றம்பலம்




## விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன




*வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு விளம்பர விபரம்*

அன்பர்கள் நமது மாத இதழில் தங்கள் நிறுவனங்கள், கடைகள் தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.

1) முழுபக்க விளம்பரம் - ரூ. 2000
2) அரை பக்க விளம்பரம் - ரூ 1000
3) முன் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000
4) பின் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000



# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்



அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

காலை உணவிற்கு - ரூ.1,500/- மதிய உணவிற்கு - ரூ.6,500/-

இரவு உணவிற்கு - ரூ.2,000/-

மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) - ரூ.12,500/-

பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ரூ.4,000/-


பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) ரூ.2,000/-

அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) - 15 லிட்டர்

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**
**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**
**Please donate through HDFC Bank Ltd.,**
**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**
**A/c No. : 08761450000048**
**IFSC Code: 0000876**
**Please send MO to:**

அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம்,
அடிஅண்ணாமலை அஞ்சல், திருஅண்ணாமலை - 606 604.



## மாதப்பூச ஜோதி தரிசனம், வடலூர்

வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தால் பெறலாம் நல்ல வரமே - வள்ளலார்.

| 19-06-2015 | 16-07-2015 | 13-08-2015 |
|---|---|---|
| வெள்ளி | வியாழன் | வியாழன் |
| மாதப்பூசம் | மாதப்பூசம் | மாதப்பூசம் |

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சியில்...

# ஆண்களுக்கான இயற்கை நல யோகவாழ்வியல் பயிற்சி முகாம்



யோகாசனம் பிராணாயாமம்
தியானம் சத்சங்கம்
பக்தி மண் குளியல்
வாழையிலை குளியல்
எண்ணெய்க் குளியல்
சத்துள்ள இயற்கை உணவு





போன்ற பேரின்ப நிகழ்வுகளில்
மூழ்கித் திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு

நாள்: ஜூன் 26, 27 & 28 வெள்ளி, சனி, ஞாயிறு
[மூன்று நாட்கள் முழுவதும்]

இடம்: வள்ளலார் சத்திய யோகசாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.

1. அன்பர்கள் ஜூன் 25 வியாழன் மாலை 7.00 மணிக்குள் வந்துவிட வேண்டும். அன்றைய இரவே பயிற்சி ஆரம்பித்துவிடும்.
2. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் எடுத்துவரவும்.
3. 5 தேங்காய், 5 கிலோ பழங்கள், 1 கிலோ உலர்ந்த (பேரிச்சம், உலர் திராட்சை) பழங்கள், 1/2 லி தேன், 1/2 கிலோ நாட்டுச் சர்க்கரை போன்றவை வாங்கி வரவும்.

உங்கள் ஆரோக்கியத்திற்கான
முதலீடு ரூ. 1000/-

அனுமதி
ஆண்களுக்கு
மட்டுமே

முன்பதிவிற்கு: 9443489849, 9942776351

பொள்ளாச்சி – அர்த்தநாரிபாளையம் மற்றும்
உடுமலை – அர்த்தநாரிபாளையம் பஸ் வசதி உண்டு.

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly June 2015, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2014-16 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

# ஆழ்நிலை தியான முகாம்



சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சி கிடைப்பதில்லை. அவனுடைய மனப் பக்குவத்தாலும், ஒழுக்க நெறிமுறைகளாலும் மட்டுமே மகிழ்ச்சி அவனை வந்தடைகின்றது.

மிகச்சிறந்த உபதேசங்கள் நாம் எதிர்பாராத நேரங்களில் எதிர்பாராத இடங்களில் இருந்து வரக்கூடும்.
அவை நம் வாழ்வின் புதிய வாசல்களை திறந்து வைக்கும்.
எனவே எப்போதும் விழிப்பாயிருங்கள்.

அடுத்த ஆழ்நிலை தியான முகாமிற்கான தேதி
விரைவில் அறிவிக்கப்படும்.
முன்பதிவு செய்துகொள்வோர் கீழ்கண்ட அலைபேசி எண்ணிற்கு
தங்கள் பெயர், வயது மற்றும் முகவரியை
SMS [அ] WHATSUP செய்யவும்.
**+91-99427 76351**

| திரு/திருமதி | Book Post |
| --- | --- |
| | |

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 97896 02258